ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

அத்திப்பட்டு ஸ்ரீமத் அழகியஶிங்கர் அருளிச்செய்த

# ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹன் அடைக்கலப்பத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹன் அடைக்கலப்பத்து

லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹ மநுசிந்த்ய த$_3$யாம்பு$_3$ராஶிம்
    லக்ஷ்மீம் தத$_3$ங்க ஸரஸீருஹ ராஜஹம்ஸீம்।
லக்ஷீசகார நரஸிம்ஹபத$_3$ப்ரபத்திம்
    யஸ்தம் ஶடா$_2$ரியதிராஜமஹம் தமீடே$_3$ ॥

திருமந்திரத் திருப்பதியாம் திருமதுராந்தக நகருள் ⋆
    உருவம் தரி அரங்கேசச் சடகோபன் தனி அருளால் ⋆
திருமந்திர உரை சுரந்த சடகோப யதிபதி செய் ⋆
    திரு வந்துறை மடி உடையான் அடைக்கலப் பத்திதுவேயாம்

‡ மாமலராள் மன்னி உறை ⋆ மடி உடையான் மஞ்சுறையும் ⋆
    மாமலையில் தனி இலகும் ⋆ மாகுருவாய் மநுவரத்தை ⋆
மாமறையோர் வானவர்க்கும் ⋆ வழங்கி அருள் மாமுனியாம் ⋆
    மாமதி சேர் நரசிங்கன் ⋆ மலர் அடியை மன்னினனே ॥ **1** ॥

பேர் வலி சேர் பொன் பெயரோன் ⋆ பேர் உடலைப் பிளந்துகிரால் ⋆
    நார் கிழிப்பாரது போல ⋆ நன்றாகக் கிழித்திட்டுச் ⋆
சார்வளை சேர் இந்திரையும் ⋆ தானும் உறை நரசிங்கன் ⋆
    பார் புகழும் அடி மலரைப் ⋆ பணிந்திட்டுப் பாங்கினனே ॥ **2** ॥

மறையோனும் மாமதி சேர் ⋆ மறு சடையன் இந்திரனும் ⋆
    மறை முனிவருடன் வந்து ⋆ மலர் அதனால் இறைஞ்சி நிற்கக் ⋆
குறை முனிவர் அரம்பையரும் ⋆ கூடி மறை பாடி நிற்க ⋆
    நறை மலராளுடன் உறையும் ⋆ நம்குருவை அடைந்தேனே ॥ **3** ॥

கொள்ளி எழு கோள் அவுணன் ⋆ குடல் அலறப் பாய்ந்திட்டுத் ⋆
தள்ளி அவன் தலை காலைத் ⋆ தனித் தனியே பிரித்திட்டும் ⋆
அள்ளி அவன் உதிரத்தை ⋆ ஆசையுடன் உண்ட பிரான் ⋆
வெள்ளி அலர் உதிரக்கை ⋆ வேண்டி வந்து பணிந்தேனே ‖ **4** ‖

காரணமாய்க் காரியமாய்க் ⋆ கண்டிடும் இவ்வுலகத்தில் ⋆
பூரணமாய் உறைகின்ற ⋆ புண்ணியனாம் இவன் என்று ⋆
நாரணன் தன் மெய் உருவம் ⋆ இதுவே என்றனைவர்க்கும் ⋆
சீர் அணிந்து வெளி நின்ற ⋆ சிங்ககுரு அடைந்தேனே ‖ **5** ‖

‡ இங்குளன் அங்குளன் அல்லன் ⋆ என்றுரைக்கக் கூடாமே ⋆
எங்கும் உளன் என் கண்ணன் ⋆ என்றுரைத்த தன் மகனைக் ⋆
குங்குமம் போல் சிவந்த கண்ணன் ⋆ குருட்டவுணன் உதைத்திட்ட ⋆
சங்கணி தூண் பிளந்த பிரான் ⋆ சதிரடியை அடைந்தேனே ‖ **6** ‖

ஓர் உருவே ஈர் உருவாம் ⋆ என் தனக்குள் கண்ணுடைய ⋆
சீர் உருவைச் சிந்தை உளர் ⋆ சிந்தியுங்கள் எனத் திகழும் ⋆
பேர் உருவ இரணியனைப் ⋆ பிணம் படவே கிழித்துகந்த ⋆
ஆர் உருவன் நரசிங்கன் ⋆ அடியன்றி மற்றிலனே ‖ **7** ‖

அஞ்சிறை சேர் அணி பறவை ⋆ அணைந்திட்ட வடிவுடையான் ⋆
அஞ்சிரம் சேர் மணியனந்தன் ⋆ ஆடியிடு மணி முடியான் ⋆
அஞ்சுருவ அவுணன் உடல் ⋆ அஞ்சாறாய்ப் பிளந்திட்ட ⋆
நஞ்சுருவன் எம் பெருமான் ⋆ தமியேன் உள் கலந்தானே ‖ **8** ‖

ஆறும் அவன் பயனும் அவன் ⋆ அனைத்துலகும் அவனேயாம் ⋆
நாறு துழாய் நரசிங்கன் ⋆ நல்ல மறையுளம் இதுவே ⋆
கூறு மதி சேரும் ⋆ குணம் உடைய வெண்மதியோர் ⋆
கூறுகின்றார் இப்படியே ⋆ குணம் இதுவே வேதியர்க்கே ‖ **9** ‖

‡ பத்துருவாய் உலகளித்த ⋆ பரமன் உரு ஒன்பதையும் ⋆
பத்துருவாய்ப் பணிந்து நின்ற ⋆ பரமகுரு தனி அருளால் ⋆
பத்துருவாம் நரசிங்கன் ⋆ பதக்கமலம் பற்று முறை ⋆
பத்துருவாம் பாட்டுரைத்துப் ⋆ பரமபதம் பணிந்தேனே ‖ **10** ‖

‡ அனைத்துலகும் வாழ வந்த ⋆ ஆதி நரசிங்கன் அடி ⋆
தினைத்தனையுமறவாத ⋆ சிந்தை உள்ள சடகோபன் ⋆
தனத்துறையும் உடையவரும் ⋆ தாங்கும் உரை மாமுனிவன் ⋆
மனத்துவைப்பார் ஈர் ஐந்தும் ⋆ மன் வாழ்வார் இவ்வுலகே ‖ **11** ‖

ஸ்ரீ லக்ஷ்மீந்ரு’ஸிம்ஹன் அடைக்கலப்பத்து முற்றிற்று
சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidāmbi prapatti dot com sunder kidāmbi